This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# யவனிகா

www.writersujatha.com

'புதிய வண்டி வாங்க வேண்டாம்!' என்று சொல்லியும் வசந்த் பிடிவாதமாக லோன் எடுத்து வாங்கி அதை வாசலில் கொண்டு நிறுத்தியதில் கணேஷுக்குக் கடும் கோபம். "இத்தனை பெரிய வண்டி எதுக்குடா ஏறத்தாழ ஓனிக்ஸ் லாரி மாதிரி இருக்கு!"

"பாஸ், கேஸ் காகிதங்களுக்கு 'ஜென்'ல எடம் போறலை. சில சமயம் ரெண்டு பேரும் கதவுக்கு வெளியில பிரயாணம் செய்ய வேண்டியிருக்கு. அப்பால கட்சிக்காரங்களை ஆட்டோல வரச் சொன்னா வக்கீலை மாத்திடறாங்க"

"எனக்கென்னவோ டி.வி–ல மகனோட அமிதாப் வர்ற விளம்பரத்தைப் பார்த்து வாங்கிட்டன்னு தோணுது!"

"எஃப் டி.வி – யில அமிதாப் வர்றாரா என்ன?"

"அல்லது கேர்ள் ப்ரெண்ட்ஸ்கிட்ட ஜெர்க் விடறதுக்கா?" என்றான் கணேஷ்.

"பரவாயில்லை பாஸ், தமிழ் நல்லா இம்ப்ரூவ் ஆயிருக்கீங்க"

"சகவாசம் அப்படி"

"பாஸ் அருள்மிகு வக்கிர காளிமாதா இன்ஜினீயரிங் காலேஜ் மொஃபசல் பொண்ணுங்ககூட வேன்ல ஏறமாட்டாங்க. ஒரு மாட்டிஸ், சாண்ட்ரோ அல்லது அதிக பட்சம் யமஹாவுக்குதான் வர்றாங்க. ரொம்ப ஸ்மார்ட்டா ஆயிட்டாங்க "

"பார்க் பண்ணவே இடம் இல்லை. இத்தனை பெரிய வண்டி. பெட்ரோல் விக்கிற விலையில ..."

"டீசல் பாஸ். ஒரு லிட்டர்ல செங்கல்பட்டு வரை போகலைன்னா வலது கையைக் கழட்டிக் கொடுக்கறேன்னிருக்காரு சேல்ஸ்மேன். அத்தனை எக்னாமிக்கல். ஜப்பான் இறக்குமதி. அப்படியே பூ கணக்கா ரெமி மார்ட்டின் உள்ள போறா மாதிரி போவுது"

"மறுபடி குடிக்க ஆரம்பிச்சியா?"

"சாஸ்திரத்துக்குக் கால் இன்ச் பாஸ். அதும் எப்பாவது திருவள்ளுவா தினம், அம்பேத்கார் தினம், ராமானுஜா திருநட்சத்திரம்னு... என்னா பிக்–அப்!"

"எத்தனைடா கொடுத்தே?"